லைசென்ஸ் இன்றி செயல்பட்ட

# 24 கடைகளை மூட உத்தரவு

## கோலாலம்பூர் மாநகர் மன்றம் அதிரடி




கோலாலம்பூர், டிச. 29-

கோலாலம்பூர் மாநகர் மன்றம் மேற்கொண்ட ஒரு சிறப்பு நடவடிக்கையில் 24 கடைகளை உடனடியாக மூடுவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்தக் கடைகள் முறையான லைசென்ஸ் பெற்றிருக்கவில்லை. அதோடு அந்நியத் தொழிலாளர்கள் அங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

பொது இடத்திற்கும் அந்தக் கடைகளால் இடையூறு ஏற்பட்டது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தனது அறிக்கையில் கூறியது. இந்தச் சிறப்பு நடவடிக்கையில் மொத்தம் 70 கடைகள் சோதனை செய்யப்பட்டன.

அந்தக் கடைகளின் வர்த்தக ஆவணங்கள் அதிகாரிகளால் பரிசோதனை செய்யப்பட்டன. அந்த வகையில் 24 கடைகள் லைசென்ஸ் பெற்றிருக்கவில்லை என்பது தெரிய வந்தது. இதனையடுத்து 1976ஆம் ஆண்டு ஊராட்சி சட்டத்தின் கீழ் அந்தக் கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதேசமயம் 1974ஆம் ஆண்டு சாலை வடிகால், கட்டடச் சட்டத்தின் கீழ் பல்வேறு குற்றங்களுக்காக 25 அபராத நோட்டீஸுகளும் வெளியிடப்பட்டன என்று கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அறிக்கை மேலும் கூறியது.

சட்டவிரோதமாக இயங்கும் கடைகளைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் பணி தொடரும் என்று அது கூறியது. பொதுமக்கள் புகார் கூற விரும்பினால் மாநகர் மன்றத்திடம் அப்புகார்களைச் சமர்ப்பிக்கலாம் என்று அது கேட்டுக் கொண்டது.